3rd August 1966]

ஏழைகளுக்கு வழக்காட உதவி

* 59 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிவில் வழக்குகளில் வழக்காட இயலாத ஏழை மக்களுக்கு, கோர்ட்டு பீஸுக்கு உதவி செய்வதுபோல், வழக்கறி ஞர்கள் இலவசமாக ஆஜர் ஆவதற்கு வகை செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) No Sir.

(b) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, ஏழைகளாக இருக்கிறவர்கள் தங்களுடைய சொத்துக்கள் சம்பந்தமாக கேஸ்கள் போட்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதால், தங்களுடைய சொத்துக்களை இழக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உதவி செய்ய, கிரிமினல் கேசுகளில் போல, இலவசமாக வழக்கறிஞர்களைக் கொடுத்து உதவ ஏற்பாடு செய்யப் படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : எல்லா வற்றையும் பரிசீலனை செய்து பார்த்ததில், செலவு அதிகமாகப் போகும் என்பதால், எமர்ஜன்சி காரணமாகவும் அத்தகைய யோசனை நடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

கோட்டக்குப்பம் பஞ்சாயத்து

* 60 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கோட்டக் குப்பம் பஞ்சாயத்தை மேஜர் பஞ்சாயத்தாக்க கோரிய தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இந்தக் கோரிக்கை சென்னை கிராம வளர்ச்சி நெறியாளரிடம் வந்தது.

(இ) 1958 ஆம் ஆண்டு தமிழ்நா பஞ்சாயத்துச் சட்டத்தின்படி நகரப் பஞ்சாயத்தாகப் பாகுபடுத்துவதற்குள்ள தகுதிகளை இப் பஞ்சாயத்து பெறாததால் இக் கோரிக்கை கிராம வளர்ச்சி நெறியாளரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கோட்டக் குப்பம் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக ஆக்க முடியவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி